2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது மூலக்கேள்விக்கு தொடர்புடைய கேள்வி இல்லை. இதைத் தனிக் கேள்வியாகக் கேளுங்கள்.*

வினா வரிசை எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

43—

கூடுதல் வகுப்பறைகள்

***58090—திரு. ஈ. பாலசுப்ரமணியன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, மூங்கபாடி மகளிர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, மூங்கபாடி, குகை பகுதியில் நகரவை மகளிர் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் 2,606 மாணவிகள் பயின்று வருகின்றனர். பள்ளியில் 53 வகுப்பறைகள் உள்ளன. கடந்த ஆண்டைவிட மாணவர்கள் சேர்க்கை அதிகரித்த காரணத்தினால், கூடுதலாக 12 வகுப்பறைகள் தேவைப்பட்டன. கூடுதல் வகுப்பறைகள் கட்ட இட வசதியும் பள்ளியில் உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, தற்போது சேலம் மாநகராட்சியுடன் இணைந்து முதற்கட்டமாக 6 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இந்தக் கல்வியாண்டில் அப்பள்ளிக்கு மேலும் 6 வகுப்பறைகள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.*

[2023 ஏப்ரல் 13

முற்பகல் 10–40

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் தங்கத் தலைவர், புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரை வணங்குகிறேன். எனக்கு இந்த வாய்ப்பை அளித்த மண்ணின் மைந்தர், கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், அண்ணன் எடப்பாடியார் அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சேலம் மாநகராட்சி, குகை பகுதியில் 46–வது கோட்டத்திலே மூங்கபாடி மகளிர் மேல்நிலைப் பள்ளி 1969 ஆம் ஆண்டு, அங்கிருந்த சமுதாயத்தின் பெரியோர்களாலும், அரசின் உதவியினாலும் துவங்கப்பட்டு, ஆல் போல் தழைத்தோங்கி, இன்று அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல 2,606 பெண் குழந்தைகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்தப் பள்ளியிலே கட்டடங்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், 2006 ஆம் ஆண்டு, நான் முதன்முதலாக சேலம் மாநகராட்சிக்கு, மாமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டது முதல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: அந்தப் பள்ளிக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் செய்து கொடுத்த காரணத்தினால், இன்று இந்த நிலைமையில் அப்பள்ளி இருக்கின்றது. தற்போது பள்ளிக்கு கூடுதலாக 15 வகுப்பறைகள் தேவை. அதில் 12 வகுப்பறைகள் கட்டுவதற்கான திட்டம் தற்சமயம் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனிவரும் ஆண்டுகளில், மீண்டும் அந்தப் பள்ளிக்கு தேவையானவற்றை செய்து தர வேண்டும். ஏனென்று சொன்னால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், 10–45 மணிக்கு முடிக்க வேண்டும். நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: அங்கிருக்கும் மாநகராட்சி பள்ளிகளிலே சேலம் மாநகராட்சியில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இரண்டு கேள்விகளை கேட்டுவிட்டீர்கள். மாண்புமிகு பள்ளிக்

2023 ஏப்ரல் 13]

கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னது உண்மைதான். சேலம் மாநகராட்சி, மூங்கபாடி, குகை பகுதியில் உள்ள நகரவை மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 2,606 மாணவிகள் பயின்று வருகின்றனர். 88 ஆசிரியர்கள் மற்றும் 4 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். பள்ளியில் 53 வகுப்பறைகள், 9 ஆய்வகங்கள் மற்றும் 5* Smart class *வகுப்பறைகள் உள்ளன. மேலும், மாணவியருக்கு 38 எண்ணிக்கையில் கழிப்பறை வசதியும் உள்ளது. கூடுதல் செய்தியாக, கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் டெல்லி மாநகரத்திற்குச் சென்றபோது, அங்கிருக்கின்ற அந்த* Model Schools and Schools of Excellence-*ஐ பார்த்துவிட்டு வந்தவுடன், கிட்டத்தட்ட 6 மாதத்திற்குள் அதேபோன்று தமிழ்நாட்டில் நாமும் உடனடியாக தொடங்க வேண்டும் என்ற நோக்கத்தில், கிட்டத்தட்ட 28 தகை சால் பள்ளிகள் 171 கோடி ரூபாயிலும், 15 மாதிரிப் பள்ளிகள், கிட்டத்தட்ட 123 கோடி ரூபாயிலும் துவங்கப்படும் என்று சொன்னார்கள். டெல்லி முதலமைச்சர் அவர்கள் இங்கு வந்து பேசும்போது, 'பள்ளிகளைப் பார்த்துவிட்டு வந்த 6 மாத காலத்திற்குள், நீங்கள் இதனை ஆரம்பித்துள்ளதையும், உங்களுடைய செயல் திறனையும், வேகத்தையும் பார்க்கும்போது, எங்களுக்கு வியப்பாக இருக்கிறது' என்று தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிவிட்டுச் சென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதைச் சொல்வதற்குக் காரணம், அந்த 28 தகை சால் பள்ளிகளுள் நீங்கள் சொல்லும் பள்ளியும் ஒன்றாக வருகிறது. கிட்டத்தட்ட அதற்கென்று 6 கோடியே 38 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. கண்டிப்பாக நீங்கள் சொல்வதைக் காட்டிலும், இன்னும் அதிகப்படியான* infrastructure *வரும். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன், சுருக்கமாக,* simple *ஆக ஒரு கேள்வியை மட்டும் கேட்டு, நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் உள்ள பள்ளி, தகை சால் பள்ளியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைக் கேள்விப்படும்போது*

பெருமையாக இருக்கின்றது. இருந்தாலும்கூட இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன், உங்களுக்கு என்ன வேண்டும் என சுருக்கமாகக் கேளுங்கள்; 10–45 மணிக்குள் முடிக்க வேண்டும். (குறுக்கீடு) அதற்காகத்தான் கேட்கிறேன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் எடப்பாடியாரால் தொடங்கப்பட்ட, மாணவர்களுக்கான மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. அது எப்போது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்த நன்றிக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் மற்ற திட்டங்கள் எல்லாம் எப்போது தொடங்கப்படும் என்று கேள்வியைக் கேட்டிருக்கின்றார். அதற்கு தனியாக ஒரு கேள்வியைக் கேளுங்கள். அதற்கு நான் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 160, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி, மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

160—

மாணவர் விடுதி

***55854—திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—